## DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 115/2024**

Deposition of Witness of PW4

| | | | |
|---|---|---|---|
| Name | : முகுந்தன் | Calling | : |
| Father/Husband's Name | : | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 6th November 2025.

எதிரி ஆஜரில் உள்ளார்.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் P.K பாளையத்தில் குடியிருந்து RD கல்லூரி பின்புறம் உள்ள அம்மன் கோவில் பூசாரியாக உள்ளேன். 13.10.2021 ம் தேதி வல்லால ஈஸ்வரன் கோவில் அர்ச்சகராக உள்ள அ.சா.1 ஐ தெரியும். கடந்த 13.10.2021 அன்று காலை 9.30 மணிக்கு எப்போதும் போல் ஈஸ்வரன் கோவில்அருகே சென்றபோது நானும், விக்னேஷ் என்பவரும் சென்றபோது எதிரே இரண்டு நபர்கள் எங்கள் பைக்கை இடிப்பதுபோல் வந்தார்கள். நாங்கள் பிரேக் போட்ட போது எதிரே சரவணமாணிக்கம் திருடன் திருடன் என்று கத்தி கொண்டே வந்தார். உடனே நாங்கள் எங்கள் மீது மோதுவது போல் வந்த பைக்கை துரத்தி பிடிக்க முயன்றபோது அவர்கள் பைக்கில் வேகமாக சென்றுவிட்டார்கள்.

2. திரும்பி வந்து அ.சா.1 இடம் என்ன என்று கேட்டபோது என்னை அடித்து விட்டு அவருடைய செயினை பிடிங்கி விட்டு போய் விட்டதாக சொன்னார். யமாகா இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். அந்த வாகனத்தின் பதிவு எண். TN 34 V 8082 ஆகும். மேற்படி எதிரிகள் எனக்கு பார்த்தால் அடையாளம் தெரியும். இன்று ஆஜரில் உள்ள வெள்ளை சட்டை போட்ட எதிரியை அன்று நான் பார்த்தேன். இது சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.11.06 18:15:04 +0530

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

ஈஸ்வரன் கோவிலுக்கு அருகே அர்ச்சகர் சத்தம் போட்ட பிறகு தான் எங்களுக்கு தெரியும் என்றால் ஆமாம். நகையை திருடிய நபர்கள் வேகமாக சென்றுவிட்டார்களா என்றால் ஆமாம். சம்பவத்தின் போது நானும், விக்னேஷ்–ம் ஒரே வண்டியில் சென்றோமா என்றால் தனித்தனியாக பைக்கில் சென்றோம். புகார் கொடுப்பதற்காக நானும் சென்றேனா என்றால் ஆமாம். புகார்தாரரும் நானும் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் இந்த எதிரிக்கும் சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.11.06 18:15:11 +0530

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 115/2024**

Deposition of Witness of PW3

| | | | |
|---|---|---|---|
| Name | : விக்னேஷ் | Calling | : |
| Father/Husband's Name | : முருகேஷ் | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 6th November 2025.

1,2 ம் எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் சின்னியம்பாளையத்தில் குடியிருந்து RD கல்லூரி பின்புறம் உள்ள அம்மன் கோவில் பூசாரியாக உள்ளேன். வல்லால ஈஸ்வரன் கோவில் அர்ச்சகராக உள்ள அ.சா.1 ஐ தெரியும். கடந்த 13.10.2021 அன்று காலை 9.30 மணிக்கு எப்போதும் போல் ஈஸ்வரன் கோவில்அருகே சென்றபோது நானும், முகுந்தன் என்பவரும் சென்றபோது எதிரே இரண்டு நபர்கள் எங்கள் பைக்கை இடிப்பதுபோல் வந்தார்கள். நாங்கள் பிரேக் போட்ட போது எதிரே சரவணமாணிக்கம் திருடன் திருடன் என்று கத்தி கொண்டே வந்தார். உடனே நாங்கள் எங்கள் மீது மோதுவது போல் வந்த பைக்கை துரத்தி பிடிக்க முயன்றபோது அவர்கள் பைக்கில் வேகமாக சென்றுவிட்டார்கள்.

2. திரும்பி வந்து அ.சா.1 இடம் என்ன என்று கேட்டபோது திதி கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள் என்றும், மறுநாள் வருமாறு சொன்னதாகவும் அப்போது இருவரில் ஒருவர் இரண்டு கைகளையும் பிடித்து கொண்டதாகவும், ஒரு நபர் கழுத்தில் அணிந்திருந்த செயினை பறித்துவிட்டுபைக்கில் தப்பியேடியதாகவும் அப்பொழுது தான் நாங்கள் எதிரே வந்ததாகவும் சொன்னார். FZ பைக்கில் எதிரிகள் வந்தார்கள். நிறம் தெரியவில்லை. ஆனால் அந்த வாகனத்தின் பதிவு எண். TN 34 V 8082 ஆகும். மேற்படி எதிரிகள் எனக்கு பார்த்தால் அடையாளம் தெரியும். இன்று ஆஜரில் உள்ள வெள்ளை சட்டை போட்ட எதிரியை அன்று நான் பார்த்தேன். இது சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.11.06 18:15:19 +0530

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நகையை திருடி சென்றததாக சொல்லும் நபர்கள் சென்ற திசைக்கு நாங்கள் எதிரே சென்றோமா என்றால் ஆமாம். என்னுடன் யார் யார் வந்தார்கள் என்றால் நான் மட்டும் தான் வந்தேன். எதிரே நாங்கள் வந்தபோது அவர்கள் வண்டியை நிறுத்தாமல் வேகமாக சென்றுவிட்டார்கள். வேகமாக வரும்பொழுது அவர்கள் முகத்தை பார்த்தேனா என்றால் இருவரது முகங்களையும் பார்த்தேன். ஆஜர் எதிரி பைக்கில் பின்புறம் அமர்ந்து வந்தாரா என்றால் தவறு, ஆஜர் எதிரிதான் பைக்கை ஓட்டி கொண்டு வந்தார். ஆஜர் எதிரி தான் வண்டியை ஓட்டிவந்ததாக சொல்லிய நிலையில் அவர்கள் வேகமாக சென்றததாக நான் குறிப்பிட்டுள்ள நிலையில் எதிரிகளை பார்க்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. சரவணமாணிக்கத்துடன் நாங்கள் அனைவரும் காவல்நிலையம் போனோம். அனைவருமே பின்பு புகார் கொடுத்தோம். புகாரில் நான் சாட்சி கையொப்பம் போட்டேனா என்றால்  விசாரித்த தாளில் எழுதியதில் கையொப்பம் போட்டேன்.

2. அ.சா.1 ன் செயினை எங்கு அடிபட்டது என்றால் கன்னத்தில் அடிபட்டது. போலீஸார் என்னிடம் விசாரித்தபோது எதிரிகளின் வயது, அங்க அடையாளங்கள், நிறம், உயரம் போன்ற விபரங்களை குறிப்பிட்டேனா  என்றால் குறிப்பிட்டேன். எதிரிகளுக்கு சுமார் எத்தனை வயது இருக்கும் என்றால் 22, 23 வயது இருக்கும். போலீஸார் விசாரணையில் இதை தான் சொன்னேன். புகார்தாரரும் நானும் ஒரே தொழில் செய்வதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் இந்த எதிரிக்கும் சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.11.06 18:15:25 +0530